506

506/2/54

# சரஸ்வதி மஹால்

## ஓர் கண்ணோட்டம்

ஆசிரியர்:
S.கோபாலன்



# தஞ்சை

# சரஸ்வதி மஹால்

## ஓர் கண்ணோட்டம்

ஆசிரியர்

**ஸ்ரீ S. கோபாலன் B. A., B. L.,**

கௌரவ காரியதரிசி, ஸரஸ்வதி மஹால்.

ஸரஸ்வதி மஹால் மராத்தி பண்டிட்

**ஸ்ரீ G. நாகராஜ ராவ் அவர்களால்**

மொழிபெயர்க்கப்பட்டது.

தஞ்சை ஸரஸ்வதி மஹால் நிர்வாகக் கமிட்டியினருக்காக

கௌரவ காரியதரிசி

**ஸ்ரீ S. கோபாலன், B.A., B.L., அவர்களால்**

வெளியிடப்பட்டது.

திருச்சிராப்பள்ளி யுனைடெட் பிரிண்டர்ஸ் லிமிடெட்,

திருச்சிராப்பள்ளி.

**1954**

விலை 0—8—0

# தஞ்சை

# "சரஸ்வதி மஹால்"

(ஓர் கண்ணோட்டம்.)

உலகிலுள்ள அற்புதங்களைக் கணக்கிட்டு அவை ஏழு என்று சொல்வார்கள். அவற்றோடு தஞ்சை சரஸ்வதி மஹால் நூல் நிலையத்தையும் சேர்த்து, உலகில் அற்புதங்கள் எட்டு எனக் கருதுதல் நன்கு பொருந்தும்.

சரஸ்வதி மஹாலின் விசேஷங்களை யெல்லாம் சுருங்கச் சொல்லுவதென்பது எளிதல்ல. சரஸ்வதி மஹால் நூல் நிலையம் வெறும் பண்டைக்காலப் பொருட்காட்சி சாலையல்ல. அது தொன்மையின் சின்னங்களும் பண்டைய நூல்களும் மட்டும் அடங்கியதல்ல.

இந்நூல்நிலையம் மிகவும் முக்கியமானதாகக் கருதப்பட வேண்டியதோர் கலைப் பொக்கிஷம். சரித்திரம், சங்கீதம், வைத்தியம், விஞ்ஞானம் போன்ற பல கலைகளிலும் ஆராய்ச்சி செய்வதற்கேற்ற பல அரிய சாதனங்கள் அமையப்பெற்றுள்ளது. கவிதையில் ஈடுபட்டவர்களுக்கு ஓர் பொன்விளைந்த களமாகும். இது நமது தென்னாட்டின் அரியதோர் பாரம்பரிய சொத்து. நமது நாடு முழுமைக்கும்—என் இவ்வுலகம் முழுமைக்குமே—நன்மை விளைவிப்பதற்காகத் தொன்றுதொட்டு காப்பாற்றப்பட்டு வருகின்றது.

இந் நிலையத்தில் மூவகைக் கலாசாரங்கள் தொகுக்கப்பட்டு உள்ளன. தமிழ் நாட்டுச் சோழர்கள், தெலுங்கு தேசத்து நாயக்கர்

கள், மகாராஷ்டிர மன்னர்கள் இம் மூன்று அரச மரபினரும் இந் நூல் நிலையத்தின் வளர்ச்சியில் பெரிதும் பங்கெடுத்துக்கொண்டுள்ளனர். கடைசியாக இவற்றுடன் மேனாட்டுக் கலாசாரமும் இணைந்ததால் இந் நூல்நிலையம் உலகிலேயே மேம்பாடுடையதாயிற்று.

## சரித்திரப் பின்னணி

சரஸ்வதி மஹாலினுள் நுழையுமுன் அதற்குச் சிறந்ததோர் உருவத்தை அளிப்பதற்கு ஆதாரமான காரணங்களைத் தெரிந்து கொள்ளுதல் அவசியம். தஞ்சையின் சரித்திரமே அக் காரணங்களை நன்கு விளக்கக்கூடியது. சரித்திராசிரியர்கள் அறிந்தவரையில் தஞ்சைமாநகரை ஆதியில் ஆண்டவர்கள் 'முத்தரையர்' என்பர். அவர்கள் தஞ்சைக்கு மேற்பால் திருக்காட்டுப்பள்ளி எனும் ஊரின் அருகிலுள்ள 'செந்தலை' எனும் இடத்தைத் தலைநகராகக் கொண்டிருந்தனர் என்று தெரியவருகிறது. ஆனால் முத்தரையர்களைப் பற்றிய மற்ற விவரங்கள் கிடைத்தில. ஒன்பதாம் நூற்றாண்டில் பல்லவ அரசர்களின் கீழ் சிற்றரசர்களாக இருந்து வந்த முத்தரையர்களைச் சோழவமிசத்தைச் சேர்ந்த விஜயாலயன் (கி. பி. 850–907) என்பவர் ஜெயித்துத் தஞ்சையைக் கைப்பற்றியதாகத் தெரியவருகிறது.

சோழ மன்னர்கள் எனும் இப்பெயரில்தான் எவ்வளவு புகழும் கவர்ச்சியும் அடங்கியிருக்கின்றன! பாண்டவர்களுக்குச் சமகாலத்தில் இருந்த இவர்கள், வீரஞ்செறிந்த இதிகாச காலத்திலேயே வலிமை பொருந்திய அரசர்களாக விளங்கினர். அசோக சக்ரவர்த்தியின் பிரசித்திபெற்ற கற்றூண்களில் சோழநாட்டைப் பற்றியும் சோழமன்னர்களைப்பற்றியும் குறிப்பிடப்பட்டிருப்பதால் அசோகரின் காலமாகிய கி. மு. 250 க்கும் முன்னதாகவே சோழ மன்னர்கள் முதன்மை பெற்று விளங்கியிருக்கவேண்டும் என்று தெரிகிறது. குறைந்த அளவில் சோழவமிசம் 2000 வருடங்களுக்காவது நீடித்திருந்திருத்தல்வேண்டும். அவர்களுள் வானளாவிய கொடுமுடிகள்போல் பெருமைமிக்க பல மன்னர்கள் இருந்திருக்கி

ரர்கள். கி. பி. பதின்மூன்ருவது நூற்ருண்டுடன், சோழவமிசம் முடிவடைந்ததாகச் சரித்திரங்கள் கூறுகின்றன.

சோழர்கள் காலத்தில் அமரகாவியங்கள் பல ஏற்பட்டுத் தமிழிலக்கியத்தை நன்கு அலங்கரித்திருக்கின்றன. சோழ மன்னர்களின் தலைநகராகிய தஞ்சையில் மதிப்பிடமுடியாத அவ்வமர காவியங்கள் பல காப்பாற்றப்பட்டு வருவதில் வியப்பொன்றுமில்லை.

சோழர்களுக்குப் பிறகு தஞ்சையை ஆண்டவர்கள் நாயக்கர்கள். பதினுன்காம் நூற்ருண்டின் இறுதிவரையில் சோழவமிசத்தின் கிளைகளைச் சேர்ந்த சில சிற்றரசர்கள் தஞ்சையில் அதிகாரம் செலுத்திவந்தனர். பிறகு விஜயநகரத்தரசர்கள் சோழ மண்டலத்தைத் தங்கள் சாம்ராஜ்யத்தோடு சேர்த்துக் கொண்டனர். விஜயநகரத்தரசர்கள் தஞ்சையைத் தங்கள் பிரதிநிதிகள் மூலம் ஆண்டுவந்தனர். கி. பி. 1532-ல் சேவப்ப நாயக்கர், அச்சுதப்ப நாயக்கரால் தஞ்சையில் ராஜப்பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார். அவரே தஞ்சை நாயக்க மன்னர் வமிசத்தின் மூல புருஷர் ஆவார்.

நாயக்க மன்னர்கள் ஒவ்வொருவரும் கல்வி கேள்விகளிலும் கலைவிஞ்ஞானங்களிலும் மிகச் சிறந்தவர்கள். அவர்களுடைய பட்டமகிஷிகளும் கவிதாசக்தி வாய்ந்தவர்கள். அவர்களுடைய மந்திரிகள் புகழ்பெற்ற விற்பன்னர்களும் கவிகளும் ஆவர். நாயக்க மன்னர்களின் சமஸ்தானத்தில் ஸம்ஸ்கிருதம், தெலுங்கு, தமிழ் ஆகிய மூன்று பாஷைகளிலும் கவிஞர்களும், நாடகாசிரியர்களும் புகழ்பெற்று விளங்கிவந்தனர். நாயக்க மன்னர்களின் காலத்தில், அதாவது கி. பி. 1532 முதல் கி. பி. 1673 வரையில், அவர்களால் இயற்றப்பட்ட நூல்கள் யாவற்றையும் சரஸ்வதி மஹால் நூல் நிலையத்தில் இப்பொழுதும் காணலாம். அவற்றின்

உயர்ந்த காவிய நடையைக் கற்ஞேர் யாவரும் புகழ்ந்து வருகின்றனர்.

நாயக்கர்களிடமிருந்து கி. பி. 1674-ம் ஆண்டில் தஞ்சை ராஜ்யம் மகாராஷ்டிர மன்னர்கள் வசம் மாறியது. சக்ரவர்த்தி சிவாஜியின் சகோதரரான ஏகோஜி தஞ்சைக்கு அரசராஞர். ஏகோஜியின் வழித்தோன்றிய மராத்திய அரசர்கள் கல்வியிலும் கலைகளிலும் மிக்க ஆர்வமும் தேர்ச்சியும் உடையவராயிருந்தனர். அவர்களில் அநேகர் பல பாஷைகளையும் நன்கு கற்றிருந்தனர். அவர்கள் தமிழ், தெலுங்கு, சம்ஸ்கிருதம், மகாராஷ்டிரம் முதலிய பாஷைகளின் வளர்ச்சிக்கு வேண்டிய ஆதரவு அளித்து வந்தனர்.

சரஸ்வதி மஹால் நூல் நிலையத்திற்கோர் முதன்மையையும், சிறப்பையும் தேடித்தந்தவர் மராத்திய மன்னர் 'சரபோஜி' ஆவார். அக்காரணம் பற்றியே இந்நூல் நிலையத்திற்கு 'மன்னர் சரபோஜியின் சரஸ்வதி மஹால் நூல் நிலையம்' என்னும் பெயர் வழங்கிவருகின்றது. மன்னர் சரபோஜியால் மிகுந்த பிரயாசையுடன் பல பாஷைகளிலும் சேகரிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான நூல்கள் சரஸ்வதி மஹாலில் உள்ளன.

மராத்திய மன்னர்களாகிய துளஜாராஜா, சரபோஜி ராஜா இவ்விருவர்களுடைய காலத்தில் தான் பல நூற்ருண்டுகளாய் வளர்க்கப்பட்டுவந்த இக்கலைக் கோயில் ஆங்கில, பிரெஞ்சு முதலிய மேஞட்டுக் கலைகளின் சேர்க்கையால் அழியாச் சிறப்பெய்தியது எனக்கூறின் மிகையாகாது.

தஞ்சைச் சரித்திரத்தை நன்கு அறிவதற்கு உதவியாக, சோழரது காலம் முதல் கி. பி. 1855-ல் மகாராஷ்டிர ஆட்சியின் முடிவுவரையிலுள்ள சரித்திரம் இப்புத்தகத்தின் பிற்பகுதியில் அனுபந்தமாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

## நூல் நிலையம்

இதுவரையில் சரஸ்வதி மஹால் நூல் நிலையத்தின் வளர்ச்சிக்கான சரித்திர சாதனங்களைத் தெரிந்து கொண்டோம். இனி நூல் நிலயத்திற்குள் புகுவோம்.

ஆனால் நிலயத்தினுள் நுழையுமுன் அதோபாருங்கள்! நூல் நிலயத்திற்கு வெளியே திறந்த வெளிக்கப்பால் சிங்காரமானதோர் மண்டபம். அதில் ஓர் மனிதரின் உருவச்சிலை நிற்கின்றதல்லவா! அதுவே மன்னர் சரபோஜியின் உருவச்சிலை. அவர் வாழ்நாளிலேயே கி. பி. 1807-ல் கிழக்கிந்திய வர்த்தகக் கம்பெனியாரால் இச்சிலை நிறுவப்பட்டது. இதைச் செய்தவர் ப்ளாக்ஸ்மென் (Flaxman) எனும் ஓர் சிறந்த சிற்பி. இந்த சிலை இந்தியர்களுக்குரித்தான முறையில் கைகூப்பியவண்ணம் நூல் நிலயத்தை நோக்கி நிற்கின்றது. முதலில் ராணுவ கோலத்திற்கேற்பக் கையில் உருவிய வாளுடன் இருந்த சிலையானது, மன்னரின் வேண்டுகோளுக்கிணங்கக் கலைவாணியாகிய சரஸ்வதி தேவியை வணங்கும் முறையில் கூப்பிய கைகளுடையதாக மாற்றப்பட்டதென்று சொல்லுகிறார்கள்.



சரபோஜி மன்னர் உருவச்சிலை

சிலை நிற்கும் பீடம் $18\frac{1}{2}$ அடி நீளமும் $16\frac{1}{2}$ அடி அகலமுமுடையது. இது பளபளப்பான மெருகுடன் கூடிய கருப்பு நிறமுடைய ஒரே கருங்கல்லாகும். இக் கருங்கல் நாயக்க மன்னர்களின் காலத்தைச் சேர்ந்தது.

மன்னர் சரபோஜியின் சிலை நிற்கும் மண்டபமே நாயக்கர்களின் கொலுமண்டபம். இது 16வது நூற்றூண்டில் கட்டப்பட்டது. இம் மண்டபத்தின் அமைப்பில் ஓர் விசேஷத்தைக் காணலாம். இங்கு நின்று ஒருவர் பேசுவாராகில் அவருடைய குரலோசையை 300 கெஜங்களுக் கப்பாலும் யாதொரு மாறுதலோ இடையூருே இன்றி எளிதில் கேட்கலாம்.



சிலை மண்டபம், காவற்கூடம், பூஜாக்ருஹம்

சிலையுள்ள மண்டபத்திலிருந்து சரஸ்வதி மஹாலுக்குச் செல்லுவோம். இடையே பாருங்கள்! ஓர்புறம் மிகத் தொன்மையான ஆயுதசாலையின் கோபுரமும் மற்ருேர்புறம் முற்காலத்தில் சரியான காலத்தைக்குறிக்கும் இயந்திரம் வைக்கப்பட்டிருந்த காவற் கூடமும் காண்கின்றன. சிலை மண்டபத்திற்கும் நூல் நிலையத்திற்கும் நடுவேயுள்ள திறந்த வெளிக்கு அதன் இரு மருங்கிலுமுள்ள ஆயுதசாலைக் கோபுரம், காவற் கூடம் இவற்ருல் விசேஷ அழகு ஏற்பட்டுள்ளது. மேற் கூறிய சிலை மண்டபம், அதன் வடபாலுள்ள நாயக்க மன்னர்



ஆயுதசாலை

களின் பூஜாக்ருஹம், ஆயுதசாலைக் கோபுரத்தினடியிலுள்ள மண்டபம் இவற்றில்தான் இப்பொழுது தஞ்சை கலைக்கூடம் அமைக்கப் பெற்றுள்ளது.

இனி நூல் நிலையத்தில் நுழைவோம். நுழைந்தவுடனேயே நம்மையறியாமலேயே பக்தி நிறைந்ததோர் உணர்ச்சி நமதுள்ளத்தில் எழுகின்றது. அதன் காரணம் 'சரஸ்வதி மஹால்' எனும் பெயரும், நிலையத்தினுட்புறமுள்ள தோற்றமுமேயாகும். சரஸ்வதி மஹால் அமைந்திருக்கும் இம்மண்டபத்தைக் கட்டியவர்கள் நாயக்க மன்னர்களாவர்.

தஞ்சையில் இன்று நாம் கண்டுகளிக்கும் பல அற்புதமான ஆலயம் முதலிய சிற்பங்கள் சோழ அரசர்களாலும் நாயக்க அரசர்களாலும் கட்டப்பட்டவை. யுத்தவீரர்களாகிய மகாராஷ்டிர மன்னர்கள் கட்டடக் கலையில் வல்லுநரல்லராயினும் எல்லாக் கலைகளையும் அவர்கள் போற்றி வளர்த்ததோடு மற்ற இருவரால் கட்டப்பட்ட கட்டடங்களைக் காப்பாற்றிவந்தனர். இல்லையேல் சோழ நாயக்க மன்னர்களால் கட்டப்பட்ட கட்டடங்கள் யாவும் இன்று பாழாகியிருக்கும்.



சரஸ்வதி மஹால் உள் தோற்றம்

## மன்னர் சரபோஜியால் சேகரிக்கப்பட்ட அச்சுப் புத்தகங்கள்

சரஸ்வதி மஹாலில் அதன் பழமையை விளக்கும் அரிய பொருள்கள் பல உள. அதோ காணும் மரத்தாலான அலமாரிகள் யாவும் பல நூற்றாண்டுகளைக் கண்டவை. நிலையத்தின் கீழ்ப்புறத்தி

ுள்ள பழைய காலத்திய அலமாரிகளில் சரபோஜியால் சேகரிக்கப்பட்ட ஆங்கில அச்சுப் புத்தகங்கள் நிறைந்துள்ளன. அப் புத்தகங்கள் ஒவ்வொன்றிலும் கல்வியிற் சிறந்த சரபோஜி மன்னரின் கையெழுத்தைக் காணலாம். புத்தகங்களைப் படிப்பதில் சரபோஜிக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லையென்றே கூறலாம். அவர் பல பாஷைகளிலும் நன்கு தேர்ச்சி பெற்றவர். அவர் ஆங்கிலம், லத்தீன், க்ரீக், ப்ரெஞ்சு, ஜர்மன், இடாலியன் முதலிய பல பாஷைகளிலும் புத்தகங்களைத் தருவித்து அவற்றைப் படித்து மகிழ்ந்தார். அவர் பல பாஷைகளிலும் பாண்டித்யம் பெற்றிருந்ததல்லாமல் பல கலைகளிலும் குறிப்பாக விஞ்ஞானத்தில் மிக்க ஆர்வமுடையவர். அவரால் சேகரிக்கப்பட்ட புத்தகங்களின் அச்சுப்பிரதிகளும், ஏட்டுச் சுவடிகளுமே இதற்குச் சான்றாகும். மிகச் சிறந்ததென இக்காலத்திலும் கருதப்படும் பல அரிய ஆங்கிலப் புத்தகங்களின் முதற்பதிப்புகளை அவர் சேகரித்துள்ளார். அக்காலத்தில் நாடெங்கும் புகழ்பெற்ற தாக்கரே (Thackeray) என்னும் நூலாசிரியர் எழுதிய கட்டுரைகள் அடங்கியதும், இங்கிலாந்தில் பிரசுரிக்கப்பட்டதுமான பல சஞ்சிகைகள் மன்னர் சரபோஜியின் கையெழுத்துடன் இன்றும் இந்நூல் நிலையத்தில் காணக்கிடைக்கின்றன. ஆசிய ஐரோப்பிய கண்டங்களைச் சேர்ந்த அநேக பாஷைகளில் பிரசுரிக்கப்பட்ட பல அகராதிகளும் இலக்கண நூல்களும் அழகு வாய்ந்த சித்திரங்களடங்கிய பல நூல்களும் இங்கிருக்கின்றன.

**படங்களும் சித்திரங்களும்:** நூல் நிலையத்திற்கென சரபோஜியால் சேகரிக்கப்பட்ட பல நூல்களோடு ஓவியங்களும் முக்கிய ஸ்தானம் பெற்றுள்ளன. அவருடைய காலத்தில் இங்கிலாந்து, ஐரோப்பா, இந்தியா முதலிய நாடுகளில் அழகு பெற்றிருந்த லண்டன்மாநகரம், பல ஐரோப்பிய நகரங்கள், இமயமலையின் இயற்கைவனப்பு இவற்றை விளக்கும் அநேக படங்கள் அவரால் சேகரிக்கப்பட்டன. அவை யாவும் இன்றும் நமது கண்களுக்கு ஓர் நேர்த்தியான விருந்தையளிக்கின்றன. இம்மட்டிலா! மன்னர்



மன்னர் சரபோஜி வளர்த்த வேட்டைப் பறவை

சரபோஜி தனது சமஸ்தானத்தின் ஓவியக்காரர்களைக்கொண்டு தத்ரூபமாக இயற்கை வர்ணங்களில் தான் வளர்த்து வந்த பறவைகள், குதிரைகள், தனது மெய்க்காப்பாளரின் உடைகள் இவற்றின் படங்களை வரையச் செய்துள்ளார். மேலும் பிற்காலத்திய ஆராய்ச்சியாளர்களின் உபயோகத்திற்காக சரபோஜி தன்னுடைய ஓவியக்காரர்களைக்கொண்டும் அயல்நாட்டு ஓவியக்காரர்களைக்கொண்டும் உடற்கூறு சாஸ்திரம், தாவர சாஸ்திரம் இவற்றை நன்கு விளக்கும் வர்ணப் படங்களைத் தயாரித்துள்ளார். அவரால் சேகரிக்கப்பட்ட புத்தகங்களுள் பற்பல தேசத்து உடைகளை விளக்கும் படங்களும், யுத்த சாஸ்திரம், உடற்பயிற்சி சாஸ்திரம், இவற்றைத் தெளிவுறப் போதிக்கும் புத்தகங்களும் நமது கவனத்தைக் கவர்கின்றன.



சரபோஜி மன்னரின் குதிரைகளில் ஒன்று

சரபோஜி சேகரித்த சாமுத்ரிக சாஸ்திர நூல்களில் ப்ரெஞ்சு ஆசிரியரால் தயாரிக்கப்பட்ட நூல் மிகவும் முக்கியமானது. அந்தப்புத்தகம் இக்காலத்தில் எங்கும் கிடைத்தற்கரியதென்றே சொல்லலாம். அதில் விலங்கினங்களின் முகங்களும் அவற்றின்கீழ் அவைகளையொத்திருக்கும் மனிதவர்க்கத்தின் பலதரப்பட்ட முகங்களும் சித்தரிக்கப்பட்டிருக்கின்றன. முகங்களின் சாமியத்தை அனுசரித்து மனிதனின் குணாதிசயங்களை இந்நூல் விவரிக்கின்றது.

மகாராஷ்டிர ஏட்டுப்பிரதிகள்: இனி அடுத்துள்ள அலமாரிகளைக் கவனிப்போம். அவற்றில் மகாராஷ்டிர ஏட்டுப்பிரதி நூல்கள் இருக்கின்றன. இக்கையெழுத்துப்பிரதிகள் யாவும் பிரசித்திபெற்ற



பிரெஞ்சு ஆசிரியரால் தயாரிக்கப்பட்ட சாமுத்திரிக சாஸ்திரத்திலிருந்து சில மாதிரிப் படங்கள்

கருப்பூர் ஆடைகளால் பல மூட்டைகளாகக் கட்டப்பட்டிருக்கின்றன. அரக்குச் சாயமிடும் முறையில் நெய்யப்பட்ட கருப்பூர் ஆடைகள் இக்காலத்தில் கிடைப்பதரிது. இந்தப்பிரதிகள் யாவும் தத்துவ சாஸ்திரம், இலக்கியம், சங்கீதம், மருத்துவம், விஞ்ஞானம் முதலிய சாஸ்திரங்களைக் கூறுபவை. விசேஷமாக சரபோஜியும் மற்ற மராத்திய மன்னர்களும் இயற்றிய பல நாடகங்கள் அவற்றில் உள்ளன. இதைப்பார்த்தீர்களா! இதுதான் 'தேவேந்திர குறவஞ்சி' எனும் பூமிவர்ணனை நூல். இதை ஆக்கியோர் மன்னர் சரபோஜியே. இந்நூலில் உலகமுழுதும் சுற்றி வந்த இந்திரலோகத்துக் குறப்பெண் தான் பார்த்த பல தேசங்களையும் ஊர்களையும் வர்ணிப்பதாகக் கூறப்பட்டுள்ளது. சரபோஜி தன் ராஜ்யத்தின் மாணவ மாணவிகள் பூகோள சாஸ்திரத்தை எளிதில் கற்றுக்கொள்ளவேண்டி இந்நூலைக் குறவஞ்சி இசையில் பாட்டுக்களாக அமைத்துள்ளார். என்னே அம்மன்னரின் கலை ஆர்வம்!

மராத்தியிலுள்ள ஏட்டுப்பிரதிகளில் மகாபாரதமும் பாகவதமும் முக்கியமானவை. ஓவியத்தில் ஆர்வமுடைய ஒவ்வொருவரும் பார்க்க வேண்டியவை இவை. இவற்றின் முதலேடுகள் ஒவ்வொன்றிலும் அழகாக வர்ணமிட்ட சித்திரங்கள் தீட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு சித்திரமும் அந்தந்தப்பிரதியிலுள்ள சரித்திரத்தின் முக்கியமான பாகத்தை விளக்குகின்றது. ஸ்ரீசமர்த்த



மேலே-ஸ்ரீசுகர்பரீக்ஷித்துக்கு பாகவதம் உபதேசிக்கிறார்
கீழே - பாரதப் போரில் கண்ணன் சாரதியாகக் காட்சியளிக்கிறார்.

ராமதாஸ் சுவாமி அவர்களின் சீடரும், ஏகநாத் மகாராஜ்

அவர்களின் வழித்தோன்றியவரும், மாயூரத்திற்கருகில் வசித்து வந்தவருமான மாதவஸ்வாமி என்பவரால் இம் மகாபாரதம் இயற்றப்பட்டது. நாம் பார்க்கும் சித்திரங்கள் யாவும் சுமார் 250 வருடங்களுக்கு முன் வரையப்பட்டதாயினும் இன்று எழுதியவை போல் காணப்படுகின்றனவல்லவா !



மேலே - சத்ரபதி சிவாஜியும் ஸ்ரீ சமர்த்த ராமதாஸ் ஸ்வாமியும்
கீழே - அரிய வியாகரணச் சுருக்கம் எழுதிய ஆசிரியர் நாராயண ஸூதி

அடுத்தாற்போல் தெலுங்கு ஏட்டுப்பிரதிகளைப் பார்ப்போம். தஞ்சையில் நாயக்க மன்னர்களோடு தெலுங்கு பாஷை மறைந்து விடவில்லை என்பதை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். மராத்திய மன்னர்களில் அநேகர் தெலுங்கில் விற்பன்னராயிருந்தனர். அவர்களுடைய காலத்தில் தெலுங்கிலக்கியங்கள் பெரிதும் போற்றப்பட்டன. இப்பகுதியில் நாயக்க மன்னர்களால் சேமித்து வைக்கப்பட்ட தெலுங்கு நூல்களுடன் அவர்ளுக்குப்பின் வந்த மராத்திய மன்னர்களாலும் வேறுபல ஆசிரியர்களாலும் ஆக்கப்பட்ட தெலுங்கு நூல்களும் உள்ளன. மேலும் நாயக்கமன்னர்களாகிய ரகுநாதநாயக்கர், விஜயராகவ நாயக்கர், அவர்களது பட்ட

மகிஷிகளில் ராமபத்ராம்பா, ரெங்காஜம்மா மற்றும் அவர்களுடைய ஆஸ்தான வித்துவான்கள், கவிகள் முதலியோர் இயற்றிய பல நூல்களும் இப் பிரிவில் இருக்கின்றன. இவை தான் யக்ஷகானங்கள் என விளங்கும் பிரசித்திபெற்ற தெலுங்கு நாடகங்கள். தஞ்சை ஜில்லாவில் மெலட்டூர், சாலியமங்கலம் போன்ற கிராமங்களில் இந்த நாடகங்களில் பல இன்றும் நடிக்கப்படுகின்றன.

இந்த அதிசயத்தைப் பாருங்கள்! தெலுங்கு எழுத்துக்களில் தமிழ் நூல்கள், நாகரத்திலும் தமிழிலும் தெலுங்கு நூல்கள்; அதேபோல தமிழிலக்கியங்களை நாகரத்திலும் சமஸ்கிருத நூல்களை தெலுங்கிலும் எழுதியிருக்கிறார்கள். இதனால் தமிழ் நாட்டில் தோன்றிய தெலுங்கிலக்கியத்தின் பெருமையை நாம் அறிகிறோம். மேலும் இந்தத் தெலுங்கிலக்கியத்தால் தெலுங்கு பாஷைக்குத் தமிழ் நாடு செய்துள்ள அரிய சேவையை யாவரும் ஒப்புக்கொண்டுள்ளனர்.

தெலுங்கிலக்கியங்களில் 'ரகுநாதநாயகாப்யுதயமு' எனும் நூலும், 'கட்டவரதராஜுவின் ராமாயணமும்' முக்கியமாகக் குறிப்பிடத் தக்கவை. ரகுநாதநாயகாப்யுதயத்திலிருந்து நான்கு நூற்றாண்டுகளுக்கு முந்திய தஞ்சை அரண்மனை வர்ணனையை நாம் அறியலாம். இந் நூலிலிருந்து தஞ்சை அரண்மனை வாசலிலுள்ள புன்னை மரமும், சரஸ்வதி மஹாலும் நானூறு வருடங்களுக்கு முந்தியவை என்று தெரியவருகிறது. மேலும் அக்காலத்திலேயே அரண்மனை வாசலுக்கெதிரில், நாம் இன்று பார்க்கும் லாயங்களில் யானைகள் கட்டப்பட்டிருந்தன என்றும் தெரிகிறது. ஆச்சரியமான முறையில் இனிமையான ஒலியைப் பரப்பும் தன்மை வாய்ந்ததும், அக்காரணத்தால் கட்டடத்தின் அமைப்பைக் கண்டு இக்காலத்திய தேர்ந்த சிற்பிகளும் பட்டதாரிகளும் வியப்புறும் சங்கீத மஹால் 16-வது நூற்றாண்டின் துவக்கத்திலேயே இருந்திருக்கிறதென்பதை ரகுநாதநாயகாப்யுதயம் நமக்குக் கூறுகிறது.

தமிழர்களுக்குக் கம்பராமாயணமும் ஹிந்தி உலகிற்கு துளஸி தாஸர் ராமாயணமும் எவ்வளவு சிறப்பு வாய்ந்ததோ அத்தகைய சிறப்புடையது தெலுங்கர்களுக்கு கட்டவரதராஜுவின் ராமா யணம். இதன் ஏட்டுப்பிரதியானது, இந்நூல் நிலையத்தைத் தவிர வேறெங்குமில்லை. இதன் ஆசிரியராகிய கட்டவரதராஜு சோழர் களின் வழித் தோன்றியவர். தமிழராகிய இவரால் மிகவும் உயர்ந்ததோர் தெலுங்கிலக்கியம் எழுதப்பட்ட தென்றால் யார் தான் பாராட்டாமலிருப்பர்!

மராத்திய மன்னர்களில் இரண்டாவது அரசராகிய ஷஹாஜி மன்னன் சங்கீதக் கலையில் பிறவி ஞானியாக விளங்கினர். பிற் காலத்திய பிரம்மஸ்ரீ தியாகைய்யா அவர்களின் கீர்த்தனங்களைப் போல் பக்திரஸம் ததும்பும் 500க்கும் அதிகமான பாடல்களை ஷஹாஜி தெலுங்கில் இசைத்துள்ளார். அவர் இயற்றிய பாட்டுக் கள் யாவும் இந்நூல் நிலையத்தில் இன்றும் காணக்கிடக்கின்றன.

## தமிழ்ச் சுவடிகள்

தமிழ்ப் பிரிவை இனி பார்ப்போம். தஞ்சை ராஜ்யத்தில் சோழ ஆளுகையில் மட்டுமல்லாது அதைப் பின்தொடர்ந்த அர சர்கள் காலத்திலும் தமிழ் செழிப்புற்று விளங்கியது. உரையுடன் கூடிய திருச்சிற்றம்பலக் கோவையார், திருவாய்மொழிவாசகமாலை, மூன்று உரைகளுடன் நாலடியார், பெருந்தேவனர் பாரதம், திருக் குறளுரையின் பாடபேதங்கள் போன்ற பல அரிய நூல்கள் இத் தமிழ்ப் பிரிவை நன்கு அலங்கரிக்கின்றன. இப்பகுதியில் மிக மிகத் தொன்மையான நூல்களும், பிற்கால சந்ததியாருக்குப் பயன்படக் கூடிய நூல்களும் அடங்கியிருக்கின்றன. தமிழுலகம் பயன்பெற வேண்டி இவற்றில் சிலவற்றை இந்நூல் நிலையத்தார் பிரசுரித் துள்ளார்.

தமிழ்ப் பகுதியிலுள்ள நூல்களில் மிகவும் முக்கியமானவை விஞ்ஞானம், வைத்தியம் முதலிய கலைகள் சம்பந்தமானவை. அவற்றுள் ரஸாயன சாஸ்திர நூல்களும் சரபோஜியின் வைத் தியமுறை நூல்களும் குறிப்பிடத்தக்கவை. சரபேந்திர வைத்திய

முறை எனப்படும் சரபோஜியின் வைத்திய நூல் பதினெட்டு பாகங்களைக் கொண்டது. சரபோஜி மன்னர் தஞ்சையில் தன்வந்தரி மஹால் என்று ஓர் மருத்துவச்சாலையை நிறுவி அதில் ஆயுர்வேதம், யுனானி, சித்தவைத்தியம், ஆங்கில வைத்தியம் முதலான முறைகளில் தேர்ந்த வைத்திய நிபுணர்களை நியமித்து, அவர்களின் உதவியால் மருந்து முறைகளைப் பரிசோதித்துப் பார்த்து அனுபவத்தில் நற்பயனைக் கண்டபிறகு அம்முறைகளைப் பதினெட்டு பாகங்களாகப் பிரித்துப் பதியவைத்துள்ளார். அவற்றில் குன்மம், பிளவை, க்ஷயம், நீரிழிவு, காஸம் போன்ற எல்லாவிதமான பிணிகளுக்கும் மருந்து முறைகள் அடங்கியிருக்கின்றன. சிலநாட்களாக இந்நூல் நிலையத்தார் பிரசுரித்து வரும் சரபேந்திர வைத்திய முறை நூல்களை வைத்திய உலகும் நோயாளிகளும் ஒரு வரப்ரசாதம் என்றே கருதுகின்றனர்.

## மோடி எழுத்து

சரஸ்வதி மஹாலின் தென்மேற்குக் கோடியில் பாருங்கள்; காகிதக்கட்டுகள் நிறைந்த அநேக மூட்டைகள் இருக்கின்றன. அவற்றில் எழுதிய எழுத்துக்கள் விநோதமானவை. அவ்வெழுத்துக்களே 'மோடி' எழுத்துக்கள் எனப்படும். மராத்திய மன்னர்களின் ஆட்சியில் அரசாங்க அலுவல்களில் இந்த மோடி எழுத்துக்களே உபயோகிக்கப்பட்டு வந்தன. மகாராஷ்டிரத்தில் மோடியில் எழுதும் பழக்கம் இன்னும் இருந்து வருகிறது. ஆனால் தற்காலத்தில் சென்னை ராஜ்யத்தில் இவ்வெழுத்துக்களை அறிந்தவர்கள் வெகுசிலரே.

## சமஸ்கிருதச் சுவடிகள்

இனி சமஸ்கிருதப் பகுதியைக் கவனிப்போம். இதுகாறும் நாம் பார்த்தவற்றிலெல்லாம் மிகப் பெரியது இப்பகுதிதான். இதில் பலசாஸ்திரங்களைக் கூறும் எண்ணிறந்த ஏட்டுப்பிரதிகள் இருக்கின்றன. இது காரணம்பற்றியே சரஸ்வதி மஹால் உலகில் ஏட்டுப்பிரதிகள் கொண்ட நூல் நிலையங்களுள் முதன்மையானதெனக் கொண்டாடப்படுகின்றது.

இந்நூல் நிலயத்திற்குப் பேரும் புகழும் தேடித்தருவது இந்த சமஸ்கிருதப் பகுதிதான் என்று நிச்சயமாகக் கூறலாம். இப்பகுதியிலுள்ள மந்திர சாஸ்திரம், வேதங்கள் இவற்றைச் சார்ந்த அரிய நூல்கள், நுட்பமான கருத்துக்களைப் போதிக்கும் தத்துவ விசாரணை நூல்கள், மருத்துவம், சங்கீதம், விஞ்ஞானம், நாட்டியம் இக் கலைகளைப் போதிக்கும் நூல்கள், இவை யாவும் தனிச் சிறப்பு வாய்ந்தவை. இந் நூல்களை இயற்றியவர்கள் கலை வல்லுநர்களும், நாயக்க மராத்திய மன்னர்களும், கோவிந்த தீக்ஷதர், த்ரயம்பகராயமகி போன்ற ஆஸ்தான வித்துவான்களுமே யாவர். விஞ்ஞானம், வைத்தியம் முதலிய சாஸ்திரங்களில் ஆராய்ச்சி நடத்த விரும்புவோருக்கு இப் பகுதியில் எண்ணற்ற சாதனங்கள் கிடைக்கும். உதாரணமாக இங்குள்ள "ஆனந்த கந்தம்" என்னும் நூல் ஓர் விரிவான இரஸவாத நூல்; இதில் அடங்கியுள்ள ரஸாயன, ரஸவாத ப்ரயோகங்களைச் செய்து பார்த்து அதன் பயனை நம் நாட்டினர் அடையும்படி செய்வது விஞ்ஞான ஆராய்ச்சியாளரின் முதற் கடமையாகும்.

## படங்களுள்ள கலை நூல்கள்

அசுவ சாஸ்திரமும், கஜ சாஸ்திரமும் : அசுவ சாஸ்திரம், கஜ சாஸ்திரம் ஆகிய நூல்களும், பூதக்கண்ணாடியின் உதவியால் பார்க்கத்



யானைகளைப் பிடிக்கும் முறை

தக்க அதிநுட்பமான எழுத்துக்கள் நிறைந்த ஏடுகளும் இப் பகுதியில் குறிப்பிடத் தக்கவை. சரஸ்வதி மஹாலிற்கு வரும் பார்வையாளர்கள் இவற்றைக் கண்குளிரப் பார்த்து மகிழ்கின் றனர்.

அசுவ சாஸ்திரம், கஜ சாஸ்திரம் இவையிரண்டும் முறையே குதிரைகளையும் யானைகளையும் பற்றிக் கூறும் நூல்களாகும். இவை அழகாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன. உலகில் முதன்முதலில் குதிரைகள், யானைகள் தோன்றிய விதமும், அவற்றின் உடல மைப்பு, வளர்க்கும் முறை, அவற்றிற் கேற்படும் பிணிகளைப் போக்கும் முறைகளும் இந் நூல்களில் கூறப்பட்டுள்ளன. கஜ சாஸ்திரத்தை ஆதாரமாகக் கொண்டு அமெரிக்க நிபுணர் ஒருவர் 'மாதங்க லீலை' அல்லது 'ஹிந்துக்களின் கஜ சாஸ்திரம்' எனும் புத்தகத்தை எழுதியுள்ளார். இந்நூல் நிலையத்தார் அசுவ சாஸ் திரத்தை அழகிய வர்ணப் படங்களுடன் சமீபத்தில் பிரசுரித் திருக்கிறார்கள்.

இந்நூல்களில் இறக்கைகளைக் கொண்ட யானைகளையும் குதிரைகளையும் காண்கின்றோம். விலங்கினங்களுக்கு இறக்கைகள் இருந்ததாகச் சொல்லுவது புராணக்கூற்று என்று நினைக்கலாம். ஆனால் விஞ்ஞானிகள் பெரிய உருவம் படைத்த விலங்குகள் சிருஷ்டியில் இறக்கைகள் கொண்டிருந்தன வென்றும் பிற்காலத் தில் சிருஷ்டி முன்னேற்றத்தில் அவை இறக்கைகளை இழந்தன வென்றும் சொல்லுகிறார்கள். அது போலவே இந்த கஜசாஸ் திரத்தில் காணப்படுகின்ற இரண்டு ஜோடி தந்தங்களையுடைய யானைகளும் மூன்று ஜோடி தந்தங்களையுடைய யானைகளும் கற் பனையல்ல வென்பதற்குச் சான்றாக சின்னாட்களுக்குமுன் ஆப் பிரிக்கா கண்டத்தில் காங்கோ நாட்டில் இருஜோடி தந்தங்களு டைய யானையொன்று சுடப்பட்டதை எடுத்துக் கூறலாம்.

முதலில் நாம் சில நுட்பமான எழுத்துக்களைப் பற்றிக் கூறினோமல்லவா! அதைப் பாருங்கள்! ஒவ்வொரு எழுத்



நான்கு தந்தங்களும் ஆறு தந்தங்களும் உள்ள திக்கஜங்கள்



அரசர்க்குரிய அசுவம்



உபரந்த்ரம் என்னும் இடத்தில் சுழியுள்ள குதிரை



குதிரைமீது ரதிதேவி - மகளிர் குழாத்தினால் ஆக்கப்பெற்ற தோற்றம்

திலும் பல நுட்பமான எழுத்துக்களின் தொகுதிகள் இருக்கின்றன. மிகவும் கூர்மையான பார்வையுடையவர்களும் பூதக் கண்ணாடியின் உதவியின்றி இவ்வெழுத்துத் தொகுதிகளைப் பார்க்க இயலாது. இதனைப்பார்த்த அளவில் நம்மனதானது அதை எழுதியவரின்பால் பொறாமை கொள்ளுகிறதல்லவா !

இவைதான் ரிக்வேத மூட்டைகள். மிகவும் அழகாக எழுதப் பட்டவை. இவற்றின் மீதுள்ள சித்திரங்கள் நமது கண்களைக் கவர்கின்றன. நேர்த்தியான இச்சித்திரங்கள் வேதத்தில் ஒவ்வோர் கருத்தை விளக்குகின்றன. இந்த சம்ஸ்கிருதப் பகுதியில் உள்ள அரிய நூல்களைப்பற்றி விரிவாக உரைப்பது என்பது இயலாத காரியம். சம்ஸ்கிருத நூல்களின் அட்டவணைப் பட்டியல் இருபது பாகங்களைக் கொண்டுள்ளது. ஆகையால் இப்பகுதியைப்பற்றிச் சுருக்கமாகக் கூறுவது எளிதல்ல.



இதுகாறும் கூறியவை தவிர இந்நூல் நிலையத்தில் சரித்திர ஆராய்ச்சிக்கு அடிப்படைச் சாதனங்களான பல சுவடிகளும், எட்டுப்பிரதிகளும், அரிய புத்தகங்களும் இருக்கின்றன. தற்காலத்தில் இவையாவும் பதிப்பிலில்லாதவை. நம் நாட்டுச் சரித்திர ஆராய்ச்சியாளர்களுக்கு இவை பெரிதும் பயன்படக்கூடியவை. இவற்றினுதவியால் நம் நாட்டுச்சரித்திரத்தைப் புதுப்பித்து எழுதலாம். விசேஷமாக இவை கி. பி. 1730 க்குப் பிறகு சுமார் ஐம்பது ஆண்டுகளில் தென்னிந்தியாவில் நடந்த சில முக்கியமான

சரித்திர விஷயங்களைக் கூறுகின்றன. அக்காலத்தில் தஞ்சையை ஆண்டவர்கள் பிரதாபசிம்ஹராஜாவும் துளஜார்ராஜாவும் ஆவர். இவர்களுடைய ஆட்சி காலத்தில்தான் கிழக்கிந்திய வர்த்தகக் கம்பெனியார் வியாபாரத்துறையினின்றும் அரசாளும் வர்க்கத்தினராக மாறினர். பீஷ்வாக்களின் தலைமையில் மராத்தியர்கள் படையெடுத்தனர். ஹைதர் அலி, திப்புசுல்தான் இவர்களின் படையெழுச்சி, தஞ்சைக்கும் கர்னாடக நவாபுக்குமிடையே பூசல் முதலியன நிகழ்ந்தன. தஞ்சை இவையாவற்றிற்கும் கேந்திர ஸ்தானமாக விளங்கியது. ப்ரெஞ்சுக்காரருடன் உள்நாட்டு அரசாங்கத்தாரும் ஆங்கிலேயரும் ஒன்றுகச்சேர்ந்து நடத்திய போர்களில் தஞ்சை சம்பந்தப்படாமலில்லை என்பதை இந்த ஏட்டுப்பிரதிகளும் நூல்களும் தெளிவுறச் சாற்றுகின்றன. இவை சரித்திர ஆராய்ச்சியாளருக்கு, நமது தேச சரித்திரத்தைச் சரியானதோர் முறையில் புதிதாகத் தயாரிக்கவும், மறைந்து போன வீரர்கள், மன்னர்கள் இவர்களின் நற்கீர்த்தியை ஸ்தாபிக்கவும், அநீதியாக இகழப்பட்டவர்களின் புகழை நிலைநாட்டவும் மிகவும் உபயோகப்படும்.

இப்பொழுது சரஸ்வதி மஹாலைச் சுற்றிப்பார்த்த பிறகு நாம் யோசித்துப் பார்ப்போமாகில் இப் பெருமை வாய்ந்த ஸ்தாபனத்திற்கே முக்கிய காரணமாயிருந்த மன்னர்பிரான் சரபோஜியின் திருவுருவம் நம் கண்முன் எழுகின்றது. என்னே அம் மன்னரின் வீரம்! அன்னார் யுத்த அரங்கிலல்லாது, கலையரங்கிலும், கல்வி கேள்விகளிலும் ஒப்புயர்வற்றவராய்த் திகழ்ந்தார். சரபோஜி தனது சமஸ்தானத்தின் பொறுப்பை ஆங்கிலேயரிடம் ஒப்படைத்துவிட்டு சமாதானம் நிறைந்த கலையுலகில் வெற்றிக் கொடியை நாட்டினர். கலையுலகில் வெற்றி வாகை சூடிய அவரது அழியாப் புகழின் சின்னம்தான் இந்த சரஸ்வதி மஹால் நூல் நிலையம்.

வாழ்க்கையில் மன்னர் சரபோஜி விசேஷ லக்ஷியங்களைக் கொண்டிருந்தார். நாம் இதுகாறும் பார்த்த பலவிதமான கலை

களைப்பற்றிய நூல்கள் யாவும் சரபோஜியின் உயர்ந்த கல்வித் திறனையும் பரந்த கற்பனாசக்தியையும் விளக்குகின்றன. அவரது கலை ஆர்வம், சங்கீதம் போன்ற நுட்பமான கலைகளுடன் நில்லாது விஞ்ஞானம், மருத்துவம் முதலிய கலைகளில் ஆராய்ச்சிகளையும் சோதனைகளையும் புரிவதில் நன்கு பரவி இருந்தது. சற்றுமுன் நாம் பார்த்த 18 பாகங்கள் கொண்ட மருத்துவச் சுவடிகள் மருத்துவக் கலையில் அவர் கொண்டிருந்த ஆர்வத்தை வெளிப்படுத்துகின்றன. சரபோஜி தம் மக்களிடையே கல்வியைப் பரப்புவதில் மிகவும் ஊக்கம் கொண்டிருந்தார். அவர் தனது சமஸ்தானத்தில் மேனாட்டுக் கல்விக்கென ஓர் கலாசாலையும், நம் நாட்டுக் கல்விக்கென ஓர் கலாசாலையும் நிறுவி அவற்றில் நம் நாட்டு மக்களைக் கல்வி கற்கச் செய்தார். மாணவர்களின் உபயோகத்திற்கென அவர் பல பாட புத்தகங்களை இயற்றினார். தான் இயற்றிய நூல்கள் யாவும் அச்சேறவேண்டுமென்ற நோக்கத்தோடு கல்லச்சி யந்திரசாலை யொன்றை முதன்முதலாகத் தஞ்சையில் ஏற்படுத்தினார். சரபோஜி இந்தியாவில் நெடுந்தூரம் யாத்திரை சென்று ஆங்காங்கு தான் கண்டவற்றில் தனக்கும் தன் குடிகளுக்கும் உபயோகப்படக்கூடியவைகளை அவ்வப்போது சேகரித்து வைத்தார். கி. பி. 1826ல் தஞ்சைக்கு விஜயம் செய்து சரபோஜியின் விருந்தினராகச் சிலகாலம் அரண்மனையில் தங்கியிருந்த பிஷப் ஹீபர் என்பவர் தன்னுடைய குறிப்பில் தான் பார்த்த அநேக முடி மன்னருள் அரசர்க்குரிய குணாதிசயங்களும் பழக்கவழக்கங்களும் சரபோஜி ஒருவரிடமேதான் பார்த்ததாகக் குறித்து வைத்துள்ளார். அவரது பழக்கவழக்கங்கள் மட்டுமல்ல; அவருடைய விசாலமான புத்தியும், பரந்த அறிவும் தான் அவரைக் காண வருவோரைப் பரவசப்படுத்தின. ஏன்! அப்பெருமானின் சலியாத உழைப்பின் பயனைக் கண்டு நாமிப்பொழுது பரவசமடையவில்லையா? சரபோஜியின் பெருமையைப் பற்றித் தஞ்சையில் பல கதைகள் சொல்லப்படுகின்றன. ஆனால் அவை யாவும் கல்வி கற்பதில் அவருக்கிருந்த ஆர்வத்தையே பெரிதும் பாராட்டுகின்றன. உதாரணமாக ஒரு நாள் வெகுதூரத்திலிருந்து ஒருவர் சில அரிய

எட்டுப்பிரதி நூல்களை சரபோஜியிடம் விற்பனைக்காகக் கொண்டு வந்தார். அச்சமயம் மன்னனிடம் போதிய பொருளில்லாம லிருந்தது. ஆயினும் அந் நூல்களை விட்டுவிட மனமில்லாத சரபோஜி தான் அணிந்திருந்த விலையுயர்ந்த ஆபரணமொன்றைக் கொடுத்து அவற்றை விலைக்கு வாங்கினார். சரபோஜி சிறிதும் தயங்காது, ஏராளமான பொன்னும் பொருளும் விலையாகக் கொடுத்துச் சேகரித்த எண்ணற்ற நூல்கள் நிறைந்த பொக்கிஷ மாகையால்தான் 'சரஸ்வதி மஹால்' நூல் நிலையம் உலகிலேயே முதன்மைபெற்று விளங்குகின்றது. இந்நிலையில் சரஸ்வதி மஹாலை தஞ்சை மன்னன் சரபோஜியின் சரஸ்வதி மஹால் நூல் நிலையம் என்றழைப்பது மிகவும் பொருத்தமுடையதே! சரஸ்வதி மஹாலைப் போன்ற அழியாததோர் கலையரசை விட்டுச் சென்ற மன்னர் இப்பாரில் வேறு எவருமே இல்லை என்று திண் ணமாய்க் கூறலாம்.

தஞ்சையில் மகாராஷ்டிரரின் ஆட்சி மறைந்த பிறகுங்கூட, கடைசி அரசராகிய சிவாஜியின் சந்ததியாரால் இந்த நூல் நிலையம் நன்கு பரிபாலிக்கப்பட்டு வந்தது. கி. பி. 1918-ல் அவர்கள் பொதுநல நோக்கத்துடன் தம் தம் பாரம்பரிய உரிமை யைத் துறக்கத் துணிந்து செய்ததோர் பெரிய தியாகத்தினால் சரஸ்வதி மஹால் ஓர் நிர்வாகக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. அச்சமயம் அரசபாரம்பரிய சொத்துரிமை விஷயமாய் அவர் களுக்குள் நீதிமன்றத்தில் ஏற்பட்ட வியாஜ்ஜியத்தில் இந்நூல் நிலையமும் பங்கிடப்படவேண்டிய நிலையில் இருந்தது. ஆனால் அவர்கள் அனைவரும் ஒருமித்த மனத்தோடு இந்த நூல் நிலை யத்தைப் பொதுவுடைமையாக அரசாங்கத்திடம் ஒப்படைத்து விடுவதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கவே நியாயாதிபதி சரஸ்வதி மஹாலை ஒரு பொதுவுடமைச் சொத்தாக அரசாங்கத்திடம் ஒப்பு வித்தார். அரசாங்கத்தாரும் அரச பரம்பரையைச் சேர்ந்தவர் களின் கொடையையேற்று நிர்வாகக்குழு ஒன்றமைத்து அதனுத வியால் சரஸ்வதி மஹாலைப் பாதுகாத்து வருகின்றனர்.

சரஸ்வதி மஹாலின் பரிபாலனத்திற்காக சரபோஜியின் வழிவந்தோரால் மூலதனமாகக் கொடுக்கப்பட்ட ஒருலக்ஷம் ரூபாயிலிருந்து கிடைக்கும் வருவாயானது, நாளுக்கு நாள் விருந்



சரஸ்வதிமஹால் ஆராய்ச்சிக் குழுவினர்.

தியடைந்து வரும் நூல் நிலையத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யப்போதாமல் இருந்தது. பின்னர் கி. பி. 1930 முதல் 1936 வரையில் சென்னை அரசாங்கத்தின் உதவியைக் கொண்டு, இந்நூல் நிலையத்திலுள்ள நூல்களின் அட்டவணைகள் முறையே சம்ஸ்கிருதம், தமிழ், தெலுங்கு, மகாராஷ்டிரம் ஆகிய நான்கு பாஷைகளிலும் பிரசுரிக்கப்பட்டன. நமது பாரதநாட்டின் மீது கி. பி. 1947-ல் சுதந்திர சூரியன் உதயமான பிறகுதான் இந்நூல் நிலையத்தின் ஒளி நாற்றிசையிலும் பரவத்தொடங்கியது. அந்த வருடத்தில் சென்னை அரசாங்கத்தார் இக்கலைக் களஞ்சியத்தின் அருமை பெருமைகளையுணர்ந்து சிறந்தமுறையில் சரஸ்வதி

மஹாலேப் பரிபாலிப்பதற்கெனவும், தேசமக்களின் நலனுக்கு உகந்த சிறந்த நூல்களை அச்சிட்டுப் பிரசுரிப்பதற்கெனவும் கணிசமான தொகையை மானியமாக மனமுவந்து கொடுத்துதவ ஆரம்பித்தனர். நூல் நிலேயத்தாரும் அன்று முதல் இன்றுவரையில் பல பாஷைகளில் பற்பல சாஸ்திரங்களைக் கூறும் அநேக புத்தகங்களைப் பொதுஜன நலனுக்காகப் பிரசுரித்துள்ளார்கள். ஆனால் இன்னும் கிடைத்தற்கரிய பல நூல்கள் பிரசுரிக்கப்படவேண்டியிருக்கின்றன. அந்தப் பணியை நிறைவேற்றுவதற்கு நூல் நிலேயத்தார் சென்னை அரசாங்கம், மத்திய அரசாங்கம் இவற்றின் பொருளுதவியையும் பேராதரவையும் பெரிதும் விழைகின்றனர்.

# அனுபந்தம்

## தஞ்சை சரித்திரம்

சோழவமிசத்தரசர்களில் நமக்கு விவரம் தெரிந்த முதலாவது அரசன் கரிகாலச் சோழன் என்று சரித்திரங்கள் சாற்றுகின்றன. இவர் கி.பி. 50 முதல் கி.பி. 95 வரையில் ஆட்சிபுரிந்தார். இவர் ஓர் சிறந்த ராஜதந்திரியும் போர் வீரரும் ஆவார். கரிகாலன் தஞ்சைக்குக் கிழக்கே பதினைந்து மைல் தூரத்திலுள்ள கோவில்வன்னி என்னுமிடத்தில் சேர பாண்டியர்களின் ஐக்கியச் சேனையைச் சிதற அடித்தார். காவிரி ஆற்றிற்கு ஒரு மாபெரும் அணையைக் கட்டுவித்தார். உலக வியாபாரிகளின் சௌகரியத்திற்காகக் காவிரிப்பூம் பட்டிணத்தை ஓர் சிறந்த துறைமுகமாக்கினார். அவரது காலத்து நூலாகிய 'பட்டினப் பாலை' கரிகாலனது ஆட்சியில் கைத்தொழிலும் வியாபாரமும் எவ்வாறு தழைத்தோங்கின என்பதை விளக்குகின்றது. சிலப்பதிகாரம் எனும் மிகப் பழமையான நூல் வடநாட்டின்மீது கரிகாலனது படையெழுச்சிகளையும், மகதம் அவந்தி முதலிய நாட்டு அரசர்களைப் பணியவைத்ததையும் நன்கு விவரிக்கின்றது.

கரிகாலனும், அவருடைய புத்திரர்களும், அவர் வழிவந்த மற்றவர்களும் சங்ககாலத்து அரசர் என அழைக்கப்படுகின்றனர். அக்காலத்தில் பல சிறந்த தமிழ் நூல்கள் தோன்றின.

விஜயாலய சோழன்: ஏறக்குறைய கி. பி. ஐந்தாவது நூற்றாண்டில் சோழ வமிசம் பல்லவர்களால் ஜெயிக்கப்பட்டு கி. பி. ஒன்பதாவது நூற்றாண்டு வரையிலும் சிற்றரசர்களாகவே இருந்து வந்தனர். கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் மத்தியில் விஜயாலய சோழன் என்பவர் பல்லவர்களது பிடியினின்றும்

விடுபட்டுப் பிரசித்தியடைந்தார். அவர் கி. பி. 850 முதல் கி. பி. 871 வரையில் ஆட்சிபுரிந்தார். முத்தரையர்களிடமிருந்து தஞ்சையைக் கைப்பற்றிய பெருமை விஜயாலயனைச் சாரும். தஞ்சையில் சோழ அரசாட்சியை ஸ்தாபித்த முதல் அரசர் விஜயாலயனே.

**ஆதித்ய சோழன்:** விஜயாலயனின் புதல்வராகிய ஆதித்யர் ஓர் சிறந்த போர் வீரர். ஸ்ரீபுறம்பியம் என்னுமிடத்தில் சோழர்களுக்கும் பாண்டியர்களுக்கும் நடந்த போரில் பாண்டியர்களை முறியடித்தார். இப் போருக்குப் பிறகு பாண்டியர்கள் சீரடைய நெடுநாட்களாயின. அவருக்குப் பின் அவருடைய புதல்வராகிய முதலாவது பராந்தகன் கி. பி. 907ல் சிங்காதனமேறி கி. பி. 953 வரையில் செங்கோல் செலுத்தினர். கி. பி. 953 முதல் கி. பி. 985 வரையில் சோழ வமிசம் மறுபடியும் மங்கியது.

**ராஜராஜ சோழன்:** தமிழகத்தில் ராஜராஜ சோழனைப்பற்றி அறியாதார் யார்? இவர் சோழ அரசர்களில் மிகவும் புகழ் பெற்றவர். தன் புஜபல பராக்கிரமத்தால் தற்காலத்திய சென்னை மாகாணத்தையும் மைசூர் ராஜ்யத்தின் சில பகுதிகளையும், இலங்கைத்தீவையும் ராஜராஜன் தன் குடைக்கீழ்க் கொண்டுவந்தார். இவரது ஆட்சியில் கல்வி, கலை, வியாபாரம் இவை நன்கு செழித்தோங்கியிருந்தன. ராஜராஜனது கப்பற்படைகள் மலேயா. இந்தோசீனு, பர்மா முதலிய நாடுகளை ஜெயித்து சோழ ஆளுகையைக் கீழ்த்திசையில் பரப்பின.

தஞ்சை பெரியகோவில் என்றழைக்கப்படும் பிருஹதீஸ்வரர் ஆலயத்தை ராஜராஜன் கட்டுவித்தார். அந்தக் கோவில் நம் நாட்டுச் சிற்பக் கலையின் ஓர் உயர்ந்த சின்னமாக இன்றும் விளங்கி வருகிறது.

கி. பி. 985 முதல் கி. பி. 1014 வரையில் ராஜராஜன் அரசு புரிந்தார். கி. பி. 1279ல் மூன்ருவது ராஜேந்திரர் இறந்தார். அது வரையில் தஞ்சை சோழர் ஆளுகையில் இருந்து வந்தது.

சோழர்கள் போர்புரிவதிலும் ராஜ்யத்தை விஸ்தரிப்பதிலும் எவ்வளவு வீரமும் ஊக்கமும் கொண்டிருந்தனரோ அதேபோல கல்வியையும் கலைகளையும் பேணி வளர்ப்பதில் அவர்கள் சிறிதும் பின்தங்கியதில்லை. தமிழுலகில் சோழர் காலத்திய பழைய நூல்கள் மங்காப் புகழுடன் இன்றும் போற்றப்படுகின்றன.

**நாயக்க மன்னர்கள்:** பதினான்காம் நூற்றாண்டின் இறுதி வரையில் பலர் தங்களைச் சோழ வமிசத்தினர் எனக் கூறிக் கொண்டு தென்னாட்டின் பல பாகங்களில் அரசு செலுத்தி வந்தனர். அச்சமயத்தில் விஜயநகர மன்னர்கள் தஞ்சையைக் கைப் பற்றினார்கள். அதனைத் தங்களுடைய ராஜப்பிரதிநிதிகளைக் கொண்டு அரசாளத் தொடங்கினர். கி. பி. 1532ல் அச்சுதப்பா என்னும் விஜயநகரத்தரசன் சேவப்ப நாயக்கரைத் தஞ்சையில் ராஜப்பிரதிநிதியாக நியமித்தார். தஞ்சையை ஆண்ட நாயக்க மன்னர்களின் மூலபுருஷன் சேவப்ப நாயக்கர் ஆவார்.

**சேவப்ப நாயக்கர்:** கி. பி. 1560 வரையில் தஞ்சையை ஆண்ட சேவப்ப நாயக்கர் ஓர் சிறந்த கட்டடப் பிரியர். தேர்ந்த கலை அபிமானி. அவர் எம்மதத்தையும் சமமாக பாவிப்பவர். அவரது அந்த மதத் துவேஷமின்மை காரணமாக முகம்மதியர்களும், கிறிஸ்துவர்களும், பௌத்தர்களும் அவரை அன்புடன் நேசித்தனர். அவரும் மதப் பாகுபாடின்றி எல்லோரையும் சமமாகவே கருதி நன்மைகள் பல புரிந்து வந்தார். அவருடைய காலத்தில் நாகப் பட்டினத்தில் போர்த்துக்கீசியர் முதன்முதலில் குடியேறினர் சேவப்ப நாயக்கருக்குப் பக்கத்துணையாக இருந்தவர் கோவிந்த தீக்ஷதர் என்பவர். கோவிந்த தீக்ஷதர் சேவப்பாவின் மகனாகிய அச்சுதப்ப நாயக்கர் காலத்திலும், பேரனான ரகுநாத நாயக்கர் காலத்திலும் அமைச்சராக இருந்தார்.

**அச்சுதப்ப நாயக்கர்:** கி. பி. 1560 முதல் 1600 வரையில் அரசுபுரிந்தார். அச்சுதப்பா ஓர் சிறந்த அறிவாளி. அவர் எவ் விஷயத்தையும் வெகுசீக்கிரத்தில் தீர்மானிக்கும் வல்லமையுடை

யவர். அவர் முகம்மதியர்களையும், போர்த்துக்கீசியரையும் எதிர்த்துப் போரிட வேண்டியிருந்தது. இலங்கையையாண்ட போர்த்துக்கீசியருக்கும் யாழ்ப்பாணநாட்டு அரசருக்கும் உண்டான சச்சரவில் போர்த்துக்கீசியர் யாழ்ப்பாண அரசரை நாட்டைவிட்டுத் துரத்திவிட்டனர். நாட்டைவிட்டோடிய அவ்வரசருக்கு அச்சுதப்பா தஞ்சமளித்தார்.

**ரகுநாத நாயக்கர்:** அச்சுதப்பாவின் மைந்தராகிய ரகுநாத நாயக்கர் கி. பி. 1600 முதல் கி. பி. 1634 வரையில் அரசு புரிந்தார். தஞ்சையை ஆண்ட நாயக்க மன்னர்களில் ரகுநாத நாயக்கரே மிகவும் கீர்த்தி வாய்ந்தவர். அவரது ஆட்சியில் தஞ்சாவூர் சிறந்த வித்யாபீடமாகத் திகழ்ந்தது. கலை, கல்வி, கர்நாடக சங்கீதம் இவை நன்கு ஆதரிக்கப்பட்டன. ரகுநாத நாயக்கர் ஓர் தேர்ந்த எழுத்தாளரும் சிறந்த சங்கீத வித்வானுமாவார். அவரால் இயற்றப்பட்ட பல நூல்கள் இன்றும் சரஸ்வதி மஹாலில் இருக்கின்றன. அவருடைய பட்டமகிஷிகளும் பல நூல்களை இயற்றியுள்ளனர். ராமபத்ராம்பா, ரங்காஜம்மா, கோவிந்த தீக்ஷதர், யக்ஞநாராயண தீக்ஷதர் போன்ற பல கவிமணிகள் அவரது சபையை வெகுவாய் அலங்கரித்தனர். அந்தக் கவிஞர்கள் இயற்றிய பல நூல்களும் கவிதைகளும் சரஸ்வதி மஹாலில் இன்றும் காப்பாற்றப்பட்டு வருகின்றன.

ரகுநாதநாயக்கரின் போர்த்திறன் போற்றற்குரியது. தோப்பூர் எனுமிடத்தில் நிகழ்ந்த போரில் மதுரை அரசரையும் செஞ்சி அரசரையும் ரகுநாதர் புறங்காட்டி ஓடவைத்தார். புகழ்பெற்ற தெலுங்கு ராமாயணத்தின் ஆசிரியராகிய கட்டவரதராஜூவின் பாட்டன் தோப்பூர் யுத்தத்தில் ரகுநாதருடன் தோளோடு தோளாக நின்று போர்புரிந்தார். ரகுநாதர் இலங்கைக்குச்சென்று யாழ்ப்பாணத்திலிருந்து போர்த்துக்கீசியரை விரட்டித் தன் தந்தையால் தஞ்சமளிக்கப்பட்ட அந்நாட்டு அரசரை சிங்காதனத்தில் அமர்த்தினர்.

**விஜயராகவ நாயக்கர்:** விஜயராகவ நாயக்கருடன் நாயக்க மன்னர்களின் ஆட்சி தஞ்சையில் முடிவுற்றது. விஜயராகவனின் ஆட்சிகாலம் துயர்மிகுந்தது. இவர் கி. பி. 1634 முதல் 1673 வரை அரசாண்டார். அச்சமயத்தில் மதுரை அரசர்களும் பீஜப்பூர் சுல்தானும் தஞ்சையின்மீது பல தடவை படையெடுத்து வந்தனர். கி. பி. 1653–1659 வரையில் தஞ்சை பீஜப்பூர் சுல்தானின் ஆளுகையிலிருந்தது. விஜயராகவன் நாட்டைவிட்டுத் துரத்தப்பட்டார். நற்காலமாக இரு பெரும் படைகள் அவருடைய உதவிக்கு விரைந்து வந்தன. முதற்படையானது கி. பி. 1659-ல் தோன்றிய கொடுமையான பஞ்சமாகும். அக்கடும் பஞ்சத்தால் ஆக்ரமிப்பாளர்கள் நாட்டைவிட்டு ஓடலாயினர். வல்லம் கோட்டையிலிருந்த கள்ளர் வகுப்பைச் சேர்ந்த சேனை இழைத்த கொடுமைகளைப் பொறுக்கமுடியாது அங்கிருந்த முகம்மதியர்கள் பீஜப்பூருக்கு ஓடிவிட்டனர்.

ஆயினும் என்ன! நாயக்க அரசரின் வீழ்ச்சிக்காலம் நெருங்கிவிட்டது. கி. பி. 1673-ல் மறுபடியும் பூசல் உண்டாயிற்று. மதுரையை ஆண்ட சொக்கநாத நாயக்கர் தஞ்சையின்மீது படையெடுத்தார். விஜயராகவனும் அவனுடைய திறமை மிகுந்த குமாரன் மன்னரு தாஸும் யுத்தகளத்தில் மடிந்தனர். இவ்விருவரும் யுத்தகளத்திலிறங்குமுன் தமதந்தப்புரத்திற்குத் தீயிடச் செய்து பிறகுதான் யுத்தகளம் புகுந்தனர்.

மன்னருதாஸைப்பற்றி சில சமாசாரங்களைக் கூறுவது அவசியமாகையால் அவற்றை இங்கு குறிப்பிடுவோம். மன்னரு ஒரு சிறந்த எழுத்தாளர். அமைச்சரின் புதல்வியைக் காதலித்ததால் அவர் அரசரின் சீற்றத்திற்குப் பாத்திரமானர். விஜயராகவ நாயக்கர் மன்னருவைச் சிறையிலிட்டார். சொக்கநாதருடன் யுத்தத்திற்குச் செல்லும் வரையில் மன்னருதாஸ் சிறையிலடைபட்டிருந்தார். சிறையிலிருந்த காலத்தில் மன்னரு பல நூல்களை எழுதினர். அவற்றுள் சிறந்தது 'விஜயராகவ நாயகாப்யுதயமு' எனும் நூலாகும்.

நாயக்கர்களுடைய காலத்தில் தான் போர்த்துக்கீசியரும், டச்சுக்காரரும், ஆங்கிலேயரும் இந்தியாவில் முதன்முதலில் குடியேறி அந்நியரின் ஆட்சிக்கு அடிகோலினர். வியாபாரத்திற்கென வந்த ஐரோப்பியர்களும் பாதிரிமார்களும் இந்தியாவில் தாம் கண்டவற்றையெல்லாம் எழுதிவைத்திருக்கிறார்கள். நாயக்க மன்னர்களின் ஆட்சித் திறனை அறிய அவை நமக்கு இப்பொழுது பெரிதும் உதவுகின்றன. 17-ம் நூற்றாண்டில் முகம்மதியர் எதிர்த்த காலத்தில் தஞ்சை இருந்த நிலையைப்பற்றி அயல் நாட்டார் ஒருவர் விரிவானதோர் குறிப்பை எழுதியுள்ளார். அக்குறிப்பில் தஞ்சை நீர்வளம் நிலவளம் மல்கிய நகரமென்றும், ஐரோப்பாவிலுள்ள உறுதியான பாதுகாப்புடைய கோட்டையைப் போன்றதென்றும், பெருஞ்சேனையால் பாதுகாக்கப்படுகிறதென்றும், பகைவர்கள் எக்காலத்தில் எத்தகைய கடும் முற்றுகையிடினும் அதனை வருடக் கணக்கில் எதிர்த்து நிற்கக்கூடிய பொருள் படைத்த நகரம் என்றும் வர்ணிக்கப்பட்டுள்ளது.

விஜயராகவ நாயக்கரைப்பற்றிய ஓர் சிறிய வதந்தியையும் இங்கு கூறுவோம். எதிரிகள் படையெடுத்து வந்த காலங்களில் விஜயராகவன் தெருக்களிலெல்லாம் ஹிந்துக்களுக்குப் புனிதமான துளசி தளங்களைப் பரப்பினாராம். துளசியை எவரும் காலால் மிதிக்கலாகாதென்ற ஐதீகத்தை யொட்டி எதிரிகள் துளசியை மிதித்துக்கொண்டு கோட்டைக்குள் நுழையமாட்டார்கள் என்று நினைத்தாராம். ஆனால் எதிரியோ கால்கள் நோகா வண்ணம் தெருக்களில் மெத்தை விரித்ததுபோல் துளசி தளங்கள் பரப்பப் பட்டிருப்பதைப் பார்த்து மகிழ்ச்சியுற்று யாதொரு எதிர்ப்புமின்றி கோட்டையினுள் புகுந்தானும். மராத்திய அரசர்களில் ஒருவரைப்பற்றியும் இத்தகைய கதையொன்று சொல்லப் படுகிறது. ஆனால், இரு கதைகளும் உண்மைக்கு மாறானவை. கடைசி அரசனாகிய விஜயராகவன் இருமுறை தன் ராஜ்யத்தை விட்டுத் துரத்தப்பட்டார் என்பது உண்மை. பீஜப்பூர் சுல்தானுக்குக் கப்பம் செலுத்தி வந்தார் என்பதும் உண்மையே. ஆனால்

அவர் தன்னுடைய வாழ்நாளில் கடைசி காலத்தில் சொக்கநாதருடன் போர்புரிந்தபொழுது தன் மூதாதையர்களைப்போல தீரச் செயல்கள் பல புரிந்து சமரில் மடிந்தார். அதேபோல மராத்திய மன்னர்கள் ஒருவரும் பராக்கிரமத்தில் குறைந்தவர்களல்ல. எனவே மேற்கூறிய கதை ஒரு கட்டுக்கதையே தவிர வேறல்ல.

அழகிரியின் ஆட்சி: விஜயராகவன் இறந்த பிறகு தஞ்சை மதுரை ராஜ்யத்துடன் இணைக்கப்பட்டது. கி. பி. 1673ல் மதுரை சொக்கநாத நாயக்கரின் சகோதரரான அழகிரி தஞ்சையை ஆண்டு வந்தார். சொக்கநாதருடன் போருக்குச் செல்லுமுன் விஜயராகவன் தனது அந்தப்புரத்திற்குத் தீயிட்ட விவரம் ஏற்கனவே சொல்லப்பட்டுள்ளது; அதுசமயம் விஜயராகவனின் குழந்தையாகிய செங்கமலதாஸின் செவிலித்தாய் கோரமான அந்தப்புரத்துத் தீயினின்றும் அக்குழந்தையைக் காப்பாற்றி குழந்தையுடன் நாகப்பட்டினம் சென்றுவிட்டாள். நாகப்பட்டினத்தில் ஒரு வியாபாரியின் வீட்டில் செங்கமலதாஸ் வளர்ந்து வந்தார். எக்காரணத்தினாலோ அழகிரியிடம் வெறுப்புற்ற ராயஸம் வெங்கண்ணா என்னும் அமைச்சர் செங்கமலதாஸ் உயிருடனிருப்பதை யறிந்து அவனே சிங்காதனத்திற்கு உரியவன் என்று அழகிரிக்கு விரோதமாகக் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்தார். செங்கமலதாஸின் சார்பாக பீஜப்பூர் சுல்தானின் உதவியையும் நாடினார். சுல்தான் வெங்கண்ணாவின் வேண்டுகோளுக்கிணங்கி மகாராஷ்டிர வீரனாகிய ஏகோஜி எனும் வெங்கோஜியின் தலைமையில் ஒரு பெருஞ் சேனையைத் தஞ்சைக்கு அனுப்பினார். ஏகோஜியின் சேனைக்கும் சொக்கநாதருக்கும் அய்யம்பேட்டை எனுமிடத்தில் கி. பி. 1674-ல் போர் நடந்தது. அதில் சொக்கநாத நாயக்கர் தோல்வியுற்றார். கி. பி. 1674-ல் ஏகோஜி செங்கமலதாஸை தஞ்சைக்கு அரசனாக சிம்மாதனத்திலமர்த்தினார்.

செங்கமலதாஸ் அரசுபெற்ற சின்னாட்களுக்கெல்லாம் அவனது செவிலித்தாயும் நாகப்பட்டினத்தில் அவனுக்கு ஆதரவளித்த வியாபாரியும் வெங்கண்ணாவுடன் சச்சரவிட ஆரம்பித்

தனர். தொட்டிலாட்டிய கையானது செங்கோலை ஏந்த விரும்பியது. அவளுக்குப் பணிய மனமில்லாத வெங்கண்ணா ஏகோஜியை அணுகி தஞ்சையில் நடக்கும் அதிக்ரமங்களைப்பற்றி அறிவிக்க, வெற்றிக் கொடியின்கீழ் திரும்பிக்கொண்டிருந்த வெங்கோஜி மறுபடியும் தஞ்சைக்கு வந்து யாதொரு எதிர்ப்புமின்றி தஞ்சையை ஆக்ரமித்தார். ஏகோஜியின் வருகையை அறிந்த செங்கமலதாஸ், தஞ்சையைவிட்டு அரியலூருக்கு ஓடிவிட்டான். அன்று முதல் தஞ்சையில் மகாராஷ்டிரர்களின் ஆட்சி உதயமாயிற்று.

மகாராஷ்டிர அரசர்கள்-ஏகோஜி என்கிற வெங்கோஜி: கி. பி. 1676–1683 வரையில் ஏகோஜி அரசாண்டார். அவர் ஓர் இணையற்ற போர்வீரர். தஞ்சையைக் கைப்பற்றிய பிறகு தஞ்சையில் ஓர் மகாராஷ்டிர சாம்ராஜ்யத்தை ஸ்தாபிக்க மனங்கொண்டார். வடநாட்டில் அவரது சகோதரரான சிவாஜி தனது புஜபல பராக்கிரமத்தால் முகம்மதியர்களை முறியடித்து இப்பரதகண்டம் முழுவதையும் மகாராஷ்டிர சாம்ராஜ்யத்தின் கீழ்க் கொண்டுவருவதில் முனைந்திருந்தார். அவரது கீர்த்தி நாற்றிசையிலும் பரவியது. ஆனால் ஏகோஜி தன் சகோதரருடன் சேராது தனித்திருப்பதிலேயே ஆசைகொண்டார்.

தஞ்சாவூர் சமஸ்தானத்தில் ஏகோஜி சமாதானத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டினார். நீர்ப்பாசன வசதிகள் பல செய்வித்து விவசாயத்தை அபிவிருத்தி செய்தார். தஞ்சையைக் கைப்பற்ற எண்ணிய மதுரை, மைசூர் அரசர்களை அவ்வப்போது முறியடித்தார். தன்னுடைய பல அலுவல்களுக்கிடையே அவர் கல்விக் கலைகளைப் போற்றாமலில்லை. அவரது காலத்தில் ஸம்ஸ்கிருதமும் தெலுங்கும் பெரிதும் ஆதரிக்கப்பட்டன. அவருடைய சமகாலீனரான சிவராமகவி இயற்றிய 'காமகலாநிதி' எனும் தெலுங்கு நூலானது மைசூர் சேனையின் எதிர்ப்பினின்றும் திருச்சிராப்பள்ளிக் கோட்டையைக் காப்பாற்றுகையில் ஏகோஜி புரிந்த வியக்கத்தக்க வீரச்செயல்களை நன்கு விவரிக்கின்றது.



ஏகோஜி (1676—1683) ஷாஜி (1684—1712) சரபோஜி (1712—1728)

எகோஜி தன் ஜீவிய காலத்திலேயே அரசபதவியினின்றும் விலகி தன்னுடைய மூன்று குமாரர்களையும் அரசாளும்படி செய்தார். மூத்த குமாரராகிய ஷஹாஜியைத் தஞ்சாவூரிலும், இரண்டாவது பிள்ளை சரபோஜியைக் கும்பகோணத்திற்கருகில் சாக்கோட்டையிலும், துகோஜி எனும் மூன்றாவது குமாரரை மன்னார்குடிக்கருகில் மஹாதேவிப்பட்டணத்திலும் அரசராக்கினார்.

ஷஹாஜி :--இவர் கி. பி. 1684-1712 வரை அரசாண்டார் இவர் மிகவும் சுறுசுறுப்புடையவர். முதிர்ந்த அறிவாளி. தன் தந்தையிடமிருந்த திறமை வாய்ந்த அமைச்சர்களினுதவியால் அவர் யுத்தகளத்திலும் அரசு புரிவதிலும் புகழ்பெற்றார். செஞ்சிக்கோட்டையை முகலாயர் முற்றுகையிட்ட பொழுது ஷஹாஜி பெருஞ் சேனையுடன் செஞ்சிக்கு விரைந்து முகலாயர்களை விரட்டி சிவாஜியின் புதல்வராகிய ராஜாராம் ராஜாவிற்கு உதவிபுரிந்தார். ஆனால் பிற்காலத்தில் முகலாயர் ஜுல்பீகர் அலிகானின் தலைமையில் தஞ்சையை மும்முறை தாக்கினர். ஷஹாஜி அவ்வப்போது மொகலாயர்களுக்கு ஏராளமான பொருளைப் பரிசாகக் கொடுத்துத் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டியதாயிற்று.

ஷஹாஜி சிறந்த வித்துவானாக இருந்ததோடு பல பாஷைகளையும் கற்றிருந்தார். அவருடைய காலத்தில் ஸம்ஸ்கிருதத்திலும் தெலுங்கிலும் அநேக நூல்கள் தோன்றின. சரஸ்வதி மஹாலுக்கு அளவற்ற பெருமையைத் தேடித்தரும் நூல்களில் ஷஹாஜி காலத்திய நூல்கள் முதலிடம் பெற்றுள்ளன. எகோஜியின் மந்திரிகளில் ஒருவராகிய கங்காதரமகி அவர்களின் குமாரர் த்ரயம்பகராயமகி ஷஹாஜியின் மந்திரியாக இருந்தார். ஸம்ஸ்கிருதத்தில் போற்றத்தக்க பாண்டித்யமுடைய த்ரயம்பகராயமகி தர்மாகூதம் எனும் நூலை இயற்றியுள்ளார். அந்நூல் ராமாயணத்திற்கோர் கலைப்பொக்கிஷம் போன்ற விரிவுரையாகும். தஞ்சை

அரண்மனையிலுள்ள மகாராஷ்டிர தர்பார் மண்டபத்தை ஷஹாஜி கட்டுவித்தார். ராஜ்யத்தில் பல இடங்களில் மருத்துவச் சாலைகளையும், அன்ன சத்திரங்களையும், மடங்களையும் நிறுவினர். ஷஹாஜி திருவாரூர் தியாகராஜப் பெருமானிடம் மிகுந்த பக்தியுடையவர். தியாகராஜரின் மத்தியான பூஜை முடிந்துவிட்ட தென்பதைத் தஞ்சாவூருக்கும், திருவாரூருக்குமிடையே வழிநெடுக பல இடங்களில் சமதூரத்தில் அமைக்கப்பட்டிருந்த மணிகளின் ஓசையால் அறிந்து அதன் பிறகுதான் ஷஹாஜி மன்னன் தினந்தோறும் மத்தியான உணவை உட்கொள்ளுவது வழக்கம். தனது ராஜ்யத்திலுள்ள சிறந்த வித்துவான்களுக்கு ஷஹாஜி மானியங்கள் அளித்து அவர்களை ஆதரித்தார். திருவிசைநல்லூர் என்ற கிராமத்தின் பெயரை ஷஹாஜிராஜபுரம் என மாற்றி தனது ஆஸ்தானத்திலிருந்த நாற்பது வித்துவான்களுக்கு வழங்கினர்.

அந்த நாற்பது வித்துவான்களில் ஒருவரான வெங்கிட கிருஷ்ணதீக்ஷதர் 'நடேச விலாசம்' 'உத்தரசம்பு' முதலிய நூல்களை இயற்றினர். திருச்சிராப்பள்ளி, செஞ்சி இந்நாட்டு மன்னர்கள் வெங்கிட கிருஷ்ண தீக்ஷதரைப் பெரிதும் விரும்பினர். ஷஹாஜி ஒரு சிறந்த சங்கீதவித்வானும் கவியும் ஆவார். அவரால் சேகரிக்கப்பட்ட கர்னாடக சங்கீத சாஸ்திரீய முறை நூல்கள் இக்காலத்தில் சங்கீத சாஸ்திரத்தின் ஆராய்ச்சியாளருக்கு மிகவும் உதவியாயிருக்கின்றன.

ஷஹாஜிக்குப் பிறகு அவரது சகோதரர்களான சரபோஜியும் துக்கோஜியும் அரசாண்டனர். கி. பி. 1712—1728 வரையில் சரபோஜி அரசுபுரிந்தார். அவரது போர்த்திறனுல் சரபோஜி ராமனாதபுரத்து பாளையப்பட்டுக்காரர்களையும் மதுரை நாயக்கர்களையும் அடக்கி ஆண்டார். சிவகெங்கை எனும் ஜமீனை ஏற்படுத்தியவர் சரபோஜியே. சதாராவை ஆண்ட ஷாஹூவின் உதவியைக்கொண்டு சரபோஜி தஞ்சையின்மீது படையெடுத்த நிஜாமின் சைனியங்களைச் சிதற அடித்தார். சரபோஜிக்கு சந்ததிக

ளில்லை. அவரது மனைவியரில் ஒருவர் தனதாடைகளைத் துவைக்கும் பெண்ணொருத்தி ஈன்ற குழந்தையைத் தனக்குப் பிறந்த குழந்தையாகச் செய்த சூழ்ச்சி அம்பலத்திற்கு வரவே, மன்னர் அந்தக் குழந்தையைக் கொன்றுவிடச் செய்ததாகத் தெரிகிறது. ஆனால், பிற்காலத்தில் இதே ராஜகுமாரன் என்று சொல்லிக் கொண்டு பலர் தோன்றுவதற்கு இச் செய்கை சாதகமாயிற்று.

கி. பி. 1728ல் சரபோஜிக்குப் பிறகு அவருடைய சகோதரரான துக்கோஜி என்கிற முதலாவது துளஜாராஜா பட்டத்திற்கு வந்தார். அப்பொழுது திருச்சிராப்பள்ளியிலிருந்த சந்தா சாஹேப் அடிக்கடி தஞ்சையைத் தாக்கி வந்ததால் நிஜாமுடன் துளஜாராஜா சமாதானம் செய்துகொள்ள வேண்டியதாயிற்று. சந்தாசாஹேபிற்கெதிராக மதுரையை ஆண்ட ராணி மீனுக்ஷிக்கு அவர் உதவிபுரிந்தாராயினும் முகம்மதியர்கள் மதுரையைக் கைப்பற்றுவதினின்றும் தடுக்கமுடியவில்லை. துளஜா தன் முன்னோர்களைப்போல் சிறந்த கல்விமானுகவும், பல பாஷைகளில் தேர்ந்தவராகவும் கலையபிமானியாகவும் விளங்கினர். தஞ்சையில் முதன்முதலில் ஹிந்துஸ்தானி சங்கீதத்திற்கு ஆதரவளித்த பெருமை துளஜாவையே சாரும். அவர் இயற்றிய 'சங்கீத சாராம்ருதம்' எனும் நூல் சங்கீத சாஸ்திரத்தில் அவருக்கிருந்த அறிவையும் ஆர்வத்தையும் நன்கு விளக்குகின்றது. அவருடைய மந்திரிகளில் கனசியாம் என்பவர் சிறந்த எழுத்தாளர். அவருடைய மனைவியரும் அப்படியே. அறுபத்துநான்கிற்கும் அதிகமான கவிதைகளை கனசியாம் இயற்றியுள்ளார்.

துளஜாவின் ஆட்சிக் காலத்தில்தான் தஞ்சைக்குக் கிழக்கே 3 மைல் தூரத்திலுள்ள பிரசித்திபெற்ற மாரியம்மன் கோவில் கட்டப்பட்டு அரசரின் குருவான சதாசிவ ப்ரம்ஹேந்திரரால் ப்ரதிஷ்டை செய்யப்பட்டது.

ஏகோஜி II என்கிற பாபாசாஹேப்: முதலாம் துளஜாராஜாவின் மைந்தருக்கு ஏகோஜி என்று பெயர். அவர் பாபாசாஹேப் என்றும் அழைக்கப்பட்டார். அவர் கி. பி. 1736-லிருந்து ஒரு வருஷகாலம் தான் அரசுபுரிந்தார். பாபா சாஹேபிடம் சையத் எனும் முகம்மதிய வீரன் ஒருவன் இருந்தான். அவ்ன் பிரசித்தி பெற்ற சந்தா சாஹேபின் மாமன். அரசர்களை சிருஷ்டிக்கிறவன் எனும் பெயரும் சையதுக்கு உண்டு. அவன் ஒரு பெரிய சூழ்ச்சிக்காரன். அவனுடைய சூழ்ச்சியால் உண்டான உள்நாட்டுக் குழப்பங்கள் பாபா சாஹேபை மிகவும் தொந்திரவுக்குள்ளாக்கின. பாபா சாஹேப் இறக்கும்பொழுது அவருக்கு ஒரு சிறு ஆண் குழந்தை இருந்தது. அக்குழந்தைக்கு ப்ரதாப் என்று பெயர். பாபாசாஹேப்பிற்குப் பிறகு அவரது ராணி சுஜான்பாய் சிறிது காலம் அரசாண்டார். சமயமறிந்த சையத் அதிகாரத்தைக் கைப்பற்றவே அவனுடைய உதவியால் நிஜாம் தஞ்சையின் அரசாங்க அலுவல்களில் மறைமுகமாகத் தலையிடலானார். ராணி சுஜான்பாயி பல பயங்கரமான சூழ்ச்சிகளுக்கு ஆளாயினள். கி. பி. 1737-ல் காட்டுராஜா எனும் பெயர்பூண்ட போலி மனிதனொருவன் தஞ்சையின் அரசுரிமைக்குப் போட்டியிட்டான். காட்டுராஜாவிற்கு சையத் உதவியாக இருந்தான். சரபோஜியின் குமாரன் காட்டுராஜா எனக் கூறி சையத் சுஜான்பாயியை அரசபதவியினின்றும் விலக்கிக் காட்டுராஜாவை சிம்மாதனத்திலமர்த்தினான். பிறகு சில நாட்களில் சுஜான்பாயி சித்திரவதை செய்து கொல்லப்பட்டாள். அவளை அவள் அணிந்திருந்த ஆடை ஆபரணங்களுடன் சுவற்றிலிருந்த ஓர் பெரிய அலமாரியில் நிறுத்தி அதனைக் கட்டிடத்தால் மூடிக் கொன்றார்கள் என்று சொல்லப்படுகிறது. சையத் சந்தா சாஹேப் இவர்களின் உதவியால் காட்டுராஜா சிறிது காலந்தான் அரசாண்டார். இறுதியில் அவன் ஒரு போலி மனிதனெனத் தெரியவே ஜனங்கள் கிளர்ச்சி செய்து அவனை அரச பதவியினின்றும் அகற்றினர்.

அவனுக்குப் பிறகு துக்கோஜி என்கிற துளஜாராஜாவின் புதல்வர் ப்ரதாப்சிங் கி. பி. 1739-ல் பட்டத்திற்குவந்தார். பிரஜை களின் வேண்டுகோளுக்கிணங்கியே ப்ரதாப்சிங் அரசபதவியை ஏற்றார். மராத்திய அரசர்களுள் அவரை ஓர் சிறந்த அரசரெனக் கூறலாம். வித்தையிலும் வீரத்திலும் சிறந்தவர். சிம்மாதன மேறி யதும் முகம்மதியர்களைச் சூழ்ச்சிசெய்யாதவாறு ஒடுக்கினார். சையத் கொல்லப்பட்டான். பகைவர்களின் கொள்ளையினின்றும் ஹிந்துக் களையும் கோயில்களையும் காப்பாற்றினார். சதாரா அரசரின் உதவியைப் பெற்று கர்நாடகத்தின் நவாபைத் தோற்கடித்து சந்தாசாஹேபைச் சிறைப்படுத்தினார். காட்டுராஜாவின் சார்பில் வந்த ஆங்கிலேயரையும் பிரஞ்சுக்காரரையும் அவர் அடிக்கடி எதிர்த்து சமாளிக்க வேண்டியிருந்தது. பிரதாப் ஆங்கிலேயருக் குத் தேவிக்கோட்டையைக் கொடுத்து சாமர்த்தியமாக அவர் களைத் தம் வசமாக்கிக் கொண்டார். காட்டு ராஜாவின் சார்பில் தன்னை எதிர்த்த பிரஞ்சுக்காரர்களை, சேனாதிபதியான மானோஜி யின் உதவியால் யுத்தத்தில் தோற்கடித்தார்.

கர்நாடகத்தின் நவாப் அடிக்கடி தஞ்சையின் மீது படை யெடுத்து வந்ததால் நவாபை எதிர்க்கவேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு ஏற்பட்டது. பலதடவைகளில் ப்ரதாப் நவாபை முறி யடித்து வெற்றிபெற்றார். மறைமுகமாக ஆங்கிலேயர்கள் நவா பிற்கு உதவிபுரிந்தனராதலால் ஒரு சமயத்தில் ப்ரதாப் எதிரிகளை சமாளிக்கமுடியாது நவாபுடன் சமாதான உடன்படிக்கை செய்து கொண்டார். அந்த உடன்படிக்கையின்படி நவாபிற்குக் கப்பமும் செலுத்தினார். அவருடைய காலத்தில் தஞ்சையானது கர்நாடக யுத்தங்களுக்கு அரங்க மேடையாக இருந்தது. பிரதாபும் அவ ருடைய அஞ்சாநெஞ்சம் படைத்த வீரர்களும் அடிக்கடி யுத்தத் தில் ஈடுபட்டுநின்றனர்.

கி. பி. 1763-ல் பிரதாப்சிங் இறந்தார். அவருடைய மைந்தர் இரண்டாவது துளஜாராஜா அரசரானார். அவர் கி. பி. 1787

வரையில் அரசுபுரிந்தார். துளஜா நன்கு கற்றறிந்தவரும் பல பாஷைகளில் தேர்ந்தவருமாவார். தம் மூதாதையரைப் போன்று துளஜா கல்வியையும் கலைகளையும் பெரிதும் பேணி வளர்த்தார். ஆனால் அவர் காலத்தில் தஞ்சையில் ஆங்கிலேயரின் ஆதிக்கம் பரவத்தொடங்கியது. கர்நாடகநவாப் தஞ்சையைக் கைப்பற்றித் தன் ராஜ்யத்துடன் சேர்க்க விரும்பி ஆங்கிலேயரின் உதவியை நாடினார். கி. பி. 1773–ல் அவ்விரு சேனைகளும் படையெடுத்து வந்து தஞ்சையைக் கைப்பற்றின. அதுமுதல் கி. பி. 1776 வரையில் மூன்று வருடகாலத்திற்கு தஞ்சை முகம்மதியர் ஆளுகையில் இருந்தது. அப்பொழுது இங்கிலாந்திலிருந்த கிழக்கிந்திய வர்த்தகக் கம்பெனியின் நிர்வாகஸ்தர்கள் சென்னையிலிருந்த கம்பெனி அதிகாரிகளின் அநீதச் செய்கைகளால் தஞ்சை முகம்மதியர் வசமாயிற்றென அறிந்தனர். அவர்கள் அனுப்பிய கடுமையான உத்திரவின்பயனாய் சென்னையிலிருந்த கம்பெனி சிப்பந்திகள் உடனே நவாபிடமிருந்து தஞ்சையை மீட்டு துளஜா ராஜாவை அரசராக்கினர். அன்றுமுதல் தஞ்சை ராஜ்யத்தில் ஆங்கிலேய ஆதிக்கம் வலுக்கத் தொடங்கியது. துளஜாவின் வாழ் நாட்களில் கடைசி நாட்கள் துயர் நிறைந்தவை. அவருடைய குழந்தைகள் ஒவ்வொன்றாய் மரித்தன. தன்னுடைய விருத்தாப்பிய காலத்தில் சந்ததியில்லாமற் போனதால் துளஜா தன் தாயாதிகளில் ஓர் பையனை ஸ்வீகாரம் எடுத்து அச்சிறுவனுக்கு சரபோஜி எனப்பெயரிட்டார்.

பிரதாப் விவாஹம் செய்துகொண்ட ஸ்த்ரீகளில் அவரால் கட்க விவாஹம் செய்துகொள்ளப்பட்ட ஓர் ஸ்த்ரீக்கு அமர்சிங் என்ற ஓர் பிள்ளை உண்டு. ஸ்வீகாரம் எடுக்கும்பொழுது சரபோஜி மிகவும் சிறுவயதினராதலால் துளஜாராஜாவின் விருப்பப்படி சரபோஜியின் சார்பில் அமர்சிங் ராஜ்யபாரத்தை நடத்தி வந்தார். ஆனால் துளஜா இறந்த சிறிதுகாலத்தில் அமர்சிங் ராஜ்யத்தைக் கைப்பற்றும் தூர்எண்ணங்கொண்டார். அவர் சிறுவரான சரபோஜிக்கு விரோதமாக சூழ்ச்சிகள் செய்து, கிழக்கிந்தியக்

கம்பெனியாரின் உதவியால் தானே அரசரானார். கி. பி. 1786—1798 வரையில் அமர்சிங் அரசுபுரிந்தார். அவர் சரபோஜியை மிகவும் கொடுமைப்படுத்தினார். அப்பொழுது சுவார்ட்ஸ் எனும் டச்சுப் பாதிரியார் சரபோஜியின் உதவிக்கு வந்திராவிடில் அமர்சிங்கின் கொடுமைக்கு சரபோஜி இரையாகியிருப்பார் என்றே கூறலாம்.

அமர்சிங் சரபோஜியின் ஸ்வீகாரம் செல்லத்தக்கதல்ல என்ற காரணத்தைக்கூறி அரசைக் கைப்பற்றினார். சுவார்ட்ஸ் பாதிரியார் சி... சாஸ்திர நிபுணர்களின் உதவியால் ஹிந்து சாஸ்திரத்தை துருவிப்பார்த்து அமர்சிங்கின் வாதம் பொய்யென ஆங்கிலேயருக்கு எடுத்துக்காட்டி சரபோஜியின் ஸ்வீகாரம் சாஸ்திர சம்மதமானதெனத் தீர்மானிக்கச் செய்தார். சரபோஜியின் விஷயத்தில் நடந்துகொண்டதைத் தவிர மற்றெல்லா விதங்களிலும் ஓர் நல்ல அரசரென்று அமர்சிங்கை மக்கள் போற்றியதாகத் தெரியவருகிறது. ஆனால் பெருகிக் கொண்டுவரும் ஆங்கிலேயரின் ஆதிக்கத்தைத்தடுக்க அவர் பெரிதும் முயன்றதால் அவருக்கு விரோதமாகப் பல தஸ்தாவேஜுகள் ஏற்பட்டிருக்கின்றன.

கி. பி. 1798-ல் சரபோஜி மன்னர் செங்கோலேந்தினார். அதற்கு முன்பே அவர் ஆங்கிலேயருடன் ஒரு உடன்பாடு செய்து கொண்டார். அந்த உடன்படிக்கையின்படி தஞ்சை ராஜ்யத்தின் பெரும்பாகம் ஆங்கிலேயரின் வசமாயிற்று. சரபோஜியின் ஆசிரியராக இருந்த சுவார்ட்ஸ் பாதிரியார் பல ஐரோப்பிய பாஷைகளை அவருக்குக் கற்றுக்கொடுத்ததுடன் உள்ளூர் வித்துவான்களைக்கொண்டு சரபோஜிக்கு மகாராஷ்டிரமும் சம்ஸ்கிருதமும் போதித்தார். சரபோஜி கல்வியில் சிறந்தவராயும் பல பாஷைகளைக் கற்றறிந்தவராயும் விளங்கினார். அவருடைய காலத்தில் தஞ்சைக்கு விஜயம் செய்த ஹீபர் எனும் பாதிரியார், வாலென்ஷியா முதலியோர் சரபோஜியின் மேதை, கல்வித்திறன்,